# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1851/19 - 2014 පෙබරවාරි මස 25 වැනි අඟහරුවාදා - 2014.02.25

*1851/19 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

### இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுதல் சட்டம்**

*2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் பிரிவு 4 (1) மற்றும் 6 என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 35 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியும் நிதி, திட்டமிடல் துறைக்குப் பொறுப்பான அமைச்சருமானவரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதியும் நிதி, திட்டமிடல் அமைச்சரும்.

கொழும்பு,
*2014,* பெப்புருவரி *11.*

*2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுதல் (பதிவு செய்தல் மற்றும் ஆண்டு உரிமக் கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள்*

எடுத்துக்காட்டல்.

1. இவ்வொழுங்குவிதிகள் 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதி குத்தகைக்கு விடுதல் (பதிவு செய்தல் மற்றும் ஆண்டு உரிமக் கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், உடனடியாக தொழிற்பாட்டிற்கு வருதலாதலும் வேண்டும்.

உரிமத்திற்கு விண்ணப்பிக்கின்ற பகிரங்கக் கம்பனியின் வழங்கப்பட்டு இறுக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதனம்.

2. 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் பிரிவு 3 (இ) இன் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின் கீழ் உரிமம் பெறுவதற்காக விண்ணப்பிக்கின்ற பகிரங்கக் கம்பனியொன்றின் குறைந்த பட்ச வழங்கப்பட்டு இறுக்கப்பட்ட மூலதனத்தின் அளவு பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| வழங்கப்பட்டு இறுக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதனம் (ரூ. மில்.) | நடைமுறைக்கு வரும் நாள் |
|---|---|
| 250 | 2014.01.01 இலிருந்து |
| 300 | 2015.01.01 இலிருந்து |

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

எது எவ்வாறெனினும் வழங்கப்பட்ட சாதாரண பங்குகள், வழங்கப்பட்ட ஒன்றுசேராத பங்குகள், மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகள் என்பன காசிற்காக வழங்கப்பட்டவையாக இருக்குமிடத்து, மாத்திரம் அவை செலுத்தப்பட்டவையாகக் கருதப்படலாம்.

பதிவிற்கான விண்ணப்பக் கட்டணம்.

3. சட்டத்தின் பிரிவு 4 (1) (உ) இன் நோக்கங்களுக்காக, பதிவிற்கான விண்ணப்பக் கட்டணம் 100,000 ரூபாவாக இருத்தல் வேண்டும்.

பதிவுக் கட்டணம்.

4. சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பதிவினைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்புடைத்தான கட்டணமான 500.000 ரூபாவின் (பதிவு செய்யப்பட்ட கலண்டர் ஆண்டிற்கானது) பதிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

ஆண்டு உரிமக் கட்டணம்.

5. சட்டத்தின் 6 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக, சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் குத்தகை நிறுவனமும், 2014 ஆம் ஆண்டிற்கு ஏற்புடையதான ஆண்டு உரிமக் கட்டணத்தினையும் அதனை அடுத்துவரும் ஒவ்வொரு ஆண்டிற்குமான கட்டணத்தினையும் மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் கீழே எடுத்துக்காட்டப்பட்டவாறு இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்துதல் வேண்டும்.

| முன்னைய கலண்டர் ஆண்டின் முடிவிலுள்ளவாறு நிறுவனத்தின் மொத்தச் சொத்துக்கள் | ஆண்டு உரிமக் கட்டணம் (ரூபா) |
|---|---|
| 1 பில்லியன் ரூபா அல்லது அதற்குக் குறைவானது | 250,000 |
| 1 பில்லியனுக்கு மேல் ஆனால் 10 பில்லியன் ரூபாவுக்கு குறைவானது அல்லது சமனானது | 500,000 |
| 10 பில்லியன் ரூபாவுக்கு மேல் | 1,000,000 |

நீக்கிவிடுதல்.

6. 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுதல் (பதிவு செய்தல் மற்றும் உரிமக் கட்டணம்) ஒழுங்குவிதி இத்தால் நீக்கப்படுகிறது.

3- 300

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.